# ராய் பயிலகம்
# சென்னை -53. 7200363169
# பொதுத்தமிழ்

1. நூல் — நூலாசிரியர்

1. தொல்காப்பியம் - அ. தேசிய விநாயகம் பிள்ளை
2. ஆசிய ஜோதி - ஆ. கண்ணதாசன்
3. வேரில் பழுத்த பலா - இ. தொல்காப்பியர்
4. சேரமான் காதலி - இ. சமுத்திரம்

குறியீடுகள்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | இ | ஆ | ஈ | அ |
| ஆ. | இ | அ | ஈ | ஆ |
| இ. | ஈ | இ | ஆ | அ |
| ஈ. | ஈ | அ | இ | ஆ |

2. மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய் மஞ்சரையே
இவ்வரிகளில் அமைந்த இயைபு அமைந்த சொற்களைக் கண்டறிக
அ. மஞ்சள் குளிப்பாட்டி - மையிட்டு ஆ. முப்பாலும் - மஞ்சரையே
இ. மைட்டு மிக - வளர்ந்தாய் ஈ. இயைபு இல்லை

3. தெங்கம்பழகம் பிரித்து எழுதுக
அ. தொங்கம் + பழம் ஆ. தேங்கு + காய் +பழம்
இ. தெங்கு +பழம் ஈ. தெங்கு +அம் +பழம்

4. அகர வரிசையில் அமைந்த சொற்களைத் தேர்க.
அ. ஓம்பல், இறக்கம், ஊமை, ஐவர் ஆ. இறக்கம், ஊமை, ஐவர், ஓம்பல்
இ. ஊமை, ஐவர், இறக்கம், ஓம்பல் ஈ. ஐவர், இறக்கம், ஓம்பல், ஊமை

5. மணநூல் என்று அழைக்கப்படுவது
அ. சீவகசிந்தாமணி ஆ. சிலப்பதிகாரம்
இ. மணிமேகலை ஈ. கம்பராமாயணம்

6. பொருந்தாத் ஒன்றைத் தேர்வு செய்க
அ. சிறுபாணாற்றுப்படை ஆ. பெரும்பாணாற்றுப்படை
இ. திருமுருகாற்றுப்படை ஈ. பட்டினப்பாலை

7. "தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே" - என்ற பாடலடிகள் இடம் பெற்ற நூல்
அ. அகநானூறு ஆ. குறுந்தொகை இ. புறநானூறு ஈ. நற்றிணை

8. உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துக் குறிப்பிடுக
கனியிருப்பக் காய் கவர்ந் தற்று
அ. கனியை உண்ணல் ஆ. பிறரைத் தூற்றிப் பேசாமை
இ. இனியமொழி பேசல் ஈ. கடுமொழி பேசல்

9. பொருத்துதல் : நூலுக்குரிய ஆசிரியரைத் தேர்வு செய்க.

நூல்கள் — நூலாசிரியர்

1. வேரில் பழுத்த பலா -அ. பாரதியார்
2. கன்னிமாடம் -ஆ. சாண்டில்யன்
3. ஞான ரதம் -இ. பாபர்
4. பாபர் நாமா -ஈ. சமுத்திரம்

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | ஈ | ஆ | இ | அ |
| ஆ. | ஆ | ஈ | இ | அ |
| இ. | ஈ | ஆ | அ | இ |

ஈ. ஈ இ அ ஆ

10. தொடரும் தொடர்பும் அறிதல் :
உடம்பார் அழியின் உயிரார் அழிவர் -இத்தொடரைக் குறிப்பிடுபவர் யார்?
அ. திருநீலகண்டர் ஆ. திரு.வி.க இ. திருவள்ளுவர் ஈ. திருமூலர்

11. தொடரும் தொடர்பும் அறிதல் :
"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை - உலகு" - இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?
அ. திருக்குறள் ஆ. திருவாசகம் இ. புறநானூறு ஈ. மணிமேகலை

12. தொடரும் தொடர்பும் அறிதல்:
"புனற்றில்லைச் சிற்றம் பலத்தான்" - இத்தொடர் யாரைச் சுட்டும்?
அ. தில்லைவாழ் அந்தணர் ஆ. நடராசப் பெருமாள் இ. சிவனடியார் ஈ. சிவபெருமான்

13. தொடரும் தொடர்பும் அறிதல் :
"மொழி ஞாயிறு" என அழைக்கப்படுபவர் யார்?
அ. அறிஞர் அண்ணா ஆ. தேவநேயப் பாவாணர்
இ. கலைஞர் கருணாநிதி ஈ. கி.ஆ. பெ. விசுவநாதம்

13. "கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" - இக்கூற்றை சொன்னவர்
அ. பரணர் ஆ. பரஞ்சோதி முனிவர் இ. சமண முனிவர் ஈ. ஔவையார்

14. "தீதும் நன்றும் பிறர்தர வாரா" - இக்கூற்றை சொன்ன புலவர் யார்?
அ. ஔவையார் ஆ. பொன்முடியார்
இ. கணியன் பூங்குன்றனார் ஈ. கபிலர்

15. "தேனிலே ஊறிய சுவை தேரும் சிலப்பதிகாரம்" என்ற பாடியவர்
அ. வள்ளுவர் ஆ. முடியரசன் இ. பொன்முடியார் ஈ. பாரதியார்

16. "தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை" என்று பாராட்டப்பட்டவர்
அ. மறைமலையடிகள் ஆ. திரு.வி. கல்யாணசுந்தரனார்
இ. பாரதிதாசன் ஈ. பாரதியார்

17. "தமிழ் தென்றல்" என்று அழைக்கப்படுபவர்
அ. மறைமலைடியகள் ஆ. வீ.கோ. சூரியநாராயண சாஸ்திரியார்
இ. திரு.வி. கல்யாணசுந்தரனார் ஈ. மு.கதிரேசன் செட்டியார்

18. தமிழில் தோன்றிய முதல் புதினம்
அ. அலை ஓசை ஆ. ரங்கோன் ராதா
இ. அகல் விளக்கு ஈ. பிரதாப முதலியார் சரித்திரம்

19. குறுந்தொகை கடவுள் வாழ்த்து பாடியவர்
1. பாரதியார் 2. பெருந்தேவனார்
3. அடியார்க்கு நல்லார் 4. அகத்தியர்

20. ஜி.யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நூல்
1. அகநானூறு 2. புறநானூறு
3. நற்றிணை 4. சிறுபஞ்சமூலம்

21. "செல்வத்துப் பயனே ஈதல்" என்ற அடிகள் இடம் பெற்ற நூல்
1. அகநானூறு 2. திருமுருகாற்றுப்படை
3. திருமந்திரம் 4. புறநானூறு

22. மார்க்கோபோலா எந்த நாட்டைச் சேர்ந்தவர்
1. வெனிஸ் 2. பிரான்ஸ்
3. துருக்கி 4. கிரேக்கம்

23. சமண முனிவர்கள் இயற்றிய நூல்
1. நற்றிணை 2. ஆசாரக்கோவை
3. ஏலாதி 4. நாலடி நானூறு

24. முதுமொழிக் காஞ்சியின் ஆசிரியர் யார்?
1. கூடலூர் கிழார் 2. காரியாசான்
3. பரணர் 4. கபிலர்

25. "நில்லாமையுள்ளும் நெறிப்பாடும்" - என்ற வரிகளில் வழி என்னுமப் பொருள் தரும் சொல்
1. நில்லாமை 2. நெறி
3. உள் 4. பாடும்

26. செல்வம் என்னும் பொருள் தராத சொல்லை எழுதுக
1. மாடு 2. திரு
3. ஆக்கம் 4. கைம்மாறு

27. இடைச்சங்கம் அமைந்த இடம்
1. கபாடபுரம் 2. தற்போதைய மதுரை
3. தென் மதுரை 4. கடல்கொண்ட மதுரை

28. பழமொழி நானூறு - எழுதியவர்
1. காரியாசான் 2. சிவப்பிரகாசர்
3. மூன்றுரையரையனார் 4. பொய்கையார்

29. புல்லங்காடனார் எழுதிய நூல்
1. புல்லங்காடம் 2. ஏலாதி
3. கைந்நிறை 4. திரிகடுகம்

30. மதுரையில் உள்ள மீனாட்சி அம்மன் கோவிலின் மிக உயரமான கோபுரம் எது?
1. கிழக்கு கோபுரம் 2. மேற்கு கோபுரம்
3. வடக்கு கோபுரம் 4. தெற்கு கோபுரம்

31. குமரகுருபரருக்கு தன் கழுத்தில் அணிந்த முத்துமாலையை மீனாட்சி பரிசளித்த பாடல் இடம் பெற்ற பருவம்
1. தால் பருவம் 2. சப்பானி பருவம்
3. அம்புலி பருவம் 4. வருகை பருவம்

32. "தொடுக்கும் கடவுள் பழம்பாடல்" - என்ற பாடல் இடம்பெற்ற நூல்
1. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் 2. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்
3. மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ் 4. மீனாட்சியம்மன் குறம்

33. திருவாத ஊரார் என பெயர் பெற்றவர்
1. அப்பர் 2. திருஞான சம்பந்தர்
3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

34. சங்க காலத்தில் ஆடைகள் விற்கும் கடைப்பகுதியின் பெயர் எவ்வாறு அழைக்கப்பட்டது?
1. பொன்வீதி 2. அறுவை வீதி
3. கூல வீதி 4. மன்னவர் வீதி

35. மதுரையில் இராணி மங்கம்மாள் அமைத்தது----
1. பள்ளிக்கூடங்கள் 2. கோவில்கள்
3. அரண்மனைகள் 4. சத்திரங்கள்

36. கல்வெட்டில் காணப்படும் மதுரையின் பழைய பெயர் என்ன?
1. மதுரை 2. மதிரை
3. மருதை 4. மானாமதுரை

37. "தமிழ்கெழுகூடல்" - என்று மதுரையைப் பாராட்டும் நூல் எது?
1. அகநானூறு 2. பட்டினப்பாலை
3. மதுரைக்காஞ்சி 4. புறநானூறு

38. அம்மை, அப்பன் என்னும் சொல் எந்த நாட்டில் தொன்று தொட்டு வழங்கப்படுகிறது?
1. குமரிநாடு 2. கொங்கு நாடு
3. நாஞ்சில்நாடு 4. கெங்கிலு நாடு

39. தமிழ்மொழிச் சொற்களில் கீழ்க்காணும் எந்த பெயர்கள் மிக குறைவு?

1. காரணப்பெயர் 2. இடுகுறிப்பெயர்
3. எண்ணுப்பெயர் 4. பொருட்பெயர்

40. "தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவம் வேண்டாது சாலப்படும் " - இக்குறட்பாவில் சொல்லப்படும் வேளாண்மை செயல்
1. நீர்பாய்ச்சுதல் 2. உரமிடுதல்
3. உழுதல் 4. விதைத்தல்

41. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் தனது முதல் போராட்டத்தை தொடங்கிய இடம்
1. சென்னை 2. மயிலாடுதுறை
3. உறையூர் 4. திருப்பூர்

42. சோழநாட்டின் பழைய தலைநகரமாக விளங்கியது
1. திருச்சி 2. உறந்தை
3. காஞ்சி 4. மதுரை

43. "சித்திரகாரப்புலி" என்ற பட்டப் பெயரைக் கொண்டவர்
1. முதலாம் மகேந்திரவர்மன் 2. இரண்டாம் நரசிம்மன்
3. இராஜராஜன் 4. கண்டராதித்தன

44. "கண்ணே கருத்தே யென்கற்பகமே கண்ணிறைந்த விண்ணே" - என்று பாடியவர்
1. பாரதியார் 2. பாரதிதாசன்
3. தாயுமானவர் 4. டி.கே.சி

45. "கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு நானோர் தும்பி" - என்ற அடிகளுக்கு சொந்தக்காரர்
1. பாரதிதாசன் 2. கம்பர்
3. பாரதியார் 4. ஔவையார்

46. தமிழ்க்கவி, தமிழரின் கவி என பாராட்டப்பட்டவர்
1. பாரதியார் 2. பாரதிதாசன்
3. கம்பர் 4. ஒட்டக்கூத்தர்

47. மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது - வரிகள் இடம் பெற்ற நூல்
1. புறநானூறு 2. இனியவை நாற்பது
3. இன்னாநாற்பது 4. குறுந்தொகை

48. பொருத்துக
1. குவை - அ) வஞ்சகர்
2. மாரன் - ஆ) குழந்தை
3. சலவர் - இ) குவியல்
4. மதலை- ஈ) மன்மதன்

1. 1-அ 2 - ஆ 3 - இ 4 -ஈ 2. 1 - இ 2 - ஈ 3 - அ 4 - ஆ
3. 1- இ 2- ஈ 3 - அ 4 - ஆ 4. 1 - ஈ 2 - இ 3 ஆ 4- அ

49. கம்பனின் மிடுக்கையும் பாரதியாரின் சினப்போக்கையும் இவரது பாடல்களில் ஒன்றுபோல் இருக்க காணலாம்
1. வாணிதாசன் 2. கண்ணதாசன்
3. சச்சிதானந்தன் 4. கவிமணி

50. அசலாம்பிகை அம்மையாரை இக்கால ஔவையார் என பாராட்டியவர்
1. திரு.வி.க 2. பரிமேழலகர்
3. இளம்பூரணர் 4. மறைமலைஅடிகள்

51. ஒட்டக்கூத்தர் எழுதாத நூல்
1. கொன்றைவேந்தன் 2. மூவருலா
3. தக்கயாகப்பரணி 4. நாலாயிரம் கோவை

52. "தமிழ் மூவாயிரம்" என்று அழைக்கப்படும் நூல் எது?
1. திருப்பாவை 2. திருமந்திரம்
3. திருக்கருவை பதிற்றுப்பத்தந்தாதி 4. திருக்கயிலாய ஞான உலா

53. பொருத்துக

1. அருணாச்சலக் கவிராயர் - அ) மனோன்மணியம்
2. கோபால கிருட்டிண பாரதியார் - ஆ) நல்லாதனார் சரித்திரம்
3. காசி விசுவநாதர் - இ) இராமநாடகம்
4. சுந்தரனார் - ஈ) டம்பாச்சாரி விலாசம்

1. 1 - அ 2 - ஆ 3- இ 4- ஈ
2. 1 - ஈ 2 - இ 3 - ஆ 4 - அ
3. 1 -இ 2 - ஆ 3-ஈ 4 - அ
4. 1 - இ 2 - ஈ 3 - அ 4 - ஆ

54. வக்கபாகையை ஆண்ட வரபதி ஆட்கொண்டான் ஆதரித்த புலவர்

1. திருவாதவூரர்
2. வில்லிபுத்தூரார்
3. செங்கபடுத்தான் காட்டார்
4. வள்ளலார்

55. தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் பாடியவர்

1. கம்பர்
2. வாணிதாசன்
3. பாரதிதாசன்
4. பாரதியார்

56. "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா" - என்ற வரிகளை பாடியவர்

1. கபிலர்
2. கம்பர்
3. வள்ளுவர்
4. நக்கீரர்

57. "ஒப்பிலக்கணத் தந்தை" என்று அழைக்கப்பட்டவர்

1. மறைமலை அடிகள்
2. திரு.வி.க
3. கால்டுவெல்
4. திருமலையார்

58. கண்வனப்புக் கண்ணோட்டம் கால் வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் - இவ்வடிகள் பயின்று வந்துள்ள பாடல்

1. ஏலாதி
2. திருக்குறள்
3. புறநானூறு
4. சிறுபஞ்சமூலம்

59. " திரை கடலோடியும் திரவியம் தேடு" - என்று பாடியவர்

1. ஔவையார்
2. வள்ளுவர்
3. பாரதியார்
4. திருமூலர்

60. என்கடன் பணி செய்து கிடப்பதே - என்ற உரைநடை நூலை எழுதியவர்

1. திருஞானசம்பந்தர்
2. திருநாவுக்கரசர்
3. திரு.வி.க
4. திருமூலர்

61. உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே என கூறும் காப்பியம்

1. இரட்டை காப்பியம்
2. குடிமக்கள் காப்பியம்
3. புறநானூறு
4. சிலப்பதிகாரம்

62. தமிழை அதன் தொன்மை கருதி "என்றுமுள தென்தமிழ்" என்று கூறியவர் யார்/

1. ஒட்டக்கூத்தர்
2. கம்பர்
3. நக்கீரர்
4. அருகதேவர்

63. மாந்தர் இனத்திற்கு வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்தது

1. சிலப்பதிகாரம்
2. புறநானூறு
3. திருக்குறள்
4. மணிமேகலை

64. நடுவணரசு தமிழ் மொழியை செம்மொழியாக அறிவித்த ஆண்டு

1. 1996
2. 2004
3. 2002
4. 2008

65. பரிதிமாற்கலைஞர் இயற்றிய தமிழ் நாடகங்களில் ஒன்று

1. ரூபாவதி
2. செந்தமிழ் இலக்கியம்
3. சித்திர கவி
4. ராஜதண்டனை

66. " யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவன் போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில் - என பாடியவர்

1. பாரதியார்    2. பாரதிதாசன்
3. பார்த்திபன்    4. கவிமணி

67. "உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்து விட்டாலும் திருக்குறளும் கம்பன் காவியமும் இருந்தால் போதும் அதனை மொழி பெயர்த்து விடலாம்" என்று கூறியவர் யார்?
1. பாரதியார்    2. பாரதிதாசன்
3. கால்டுவெல்    4. ஜி.யு போப்

68. தமிழ் இலக்கிய உலகம் இவரை " தமிழ்வேந்தர்" என்று அழைத்தது. அவர் யார்?
1. திரு.விக.    2. கம்பர்
3. புகழேந்தி    4. இளம்பூரனார்

69. சமுதாய மறுமலர்ச்சியின் முன்னோடி, சமத்துவக் காவலர் என்று அழைக்கப்படுபவர்?
1. எம்.ஜி.ஆர்    2. பெரியார்
3. காமராசர்    4. பீமாராவ்

70. இந்தியாவின் தேசியப்பங்கு வீதம் என்னும் நூலின் ஆசிரியர்
1. தபோலிராவ்    2. அம்பேத்கார்
3. ராஜாஜி    4. தாதாபாய்

71. "செம்புலப்பெயர் நீர் போல" என்ற வரிகள் பயின்று வந்துள்ள நூல்
1. புறநானூறு    2. அகநானூறு
3. குறுந்தொகை    4. சிலப்பதிகாரம்

72. உறுமிடத்துதவா உவர் நிலம் என்னும் அடிகள் உள்ள பாடல்
1. அகநானூறு    2. புறநானூறு
3. பரிபாடல்    4. பதிற்றுப்பத்து

73. பயவாக் களரனையர் கல்லாதவர் - பாடியவர்
1. திருவள்ளுவர்    2. வள்ளலார்
3. ஔவையார்    4. கம்பர்

74. "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற வரிகள் இடம்பெறுவது
1. தேவாரம்    2. ஆத்திசூடி
3. கம்பராமாயணம்    4. தமிழ்விடு தூது

75. ஓரெழுத்து ஒருமொழி பொருள் கூறுக "வை"
1. வைத்தல்    2. கூர்மை
3. மதில்    4. பிரிவு

76. பயவாக் களரனையர் கல்லாதவர் - இவ்வரிகளை பாடியவர்
1. திருவள்ளுவர்    2. வள்ளலார்
3. ஔவையார்    4. கம்பர்

77. "அணுவைத்துளைத்து ஏழ்கடலை புகட்டி" - என்று பாடியவர்
1. வள்ளலார்    2. திருவள்ளுவர்
3. ஔவையார்    4. கம்பர்

78. சீறாப்புராணத்தை இயற்றியவர்
1. உமறுப்புலவர்    2. சமணமுனிவர்
3. பவனந்தி முனிவர்    4. மரைக்காயர்

79. பைந்தமிழ் பாவலர் என அழைக்கப்படுபவர்
1. கம்பர்    2. பாரதியார்
3. பாரதிதாசன்    4. பெருஞ்சித்தரனார்

80. நாடகப்பாங்கில் அமைந்த எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
1. புறநானூறு    2. பரிபாடல்
3. கலித்தொகை    4. பதிற்றுப்பத்து

81. கலம்பக உறுப்புகளின் எண்ணிக்கை
1. 18    2. 28

3. 20 4. 24

82. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் என்னும் பாடல் அமைந்துள்ள புராணம்
1. கந்தப்புராணம் 2. சீறாப்புராணம்
3. பெரியபுராணம் 4. வேதாரண்ய புராணம்

83. புரட்சித் துறவி என்று அழைக்கப்பட்டவர்
1. சேக்கிழார் 2. பெரியார்
3. வள்ளலார் 4. புத்தர்

84. வெண்பா எத்தனை வகைப்படும்/
1. 4 2. 6
3. 7 4. 12

85. ஒரு பைசா தமிழன் என்ற இதழின் ஆசிரியர்
1. காத்தவராயன் 2. தமிழன்பன்
3. வ.வே.சு 4. அண்ணா

86. திருவாசகத்திற்கு உரை எழுதியவர்
1. அப்பர் 2. சுந்தரர்
3. பண்டிதர் 4. சம்பந்தர்

87. குருவைப் போற்றிய குருமணி என்று அழைக்கப்பட்டவர்
1. அம்பேத்கார் 2. பெரியார்
3. காத்தவராயன் 4. காமராசர்

88. ஏழை எளிய மக்களின் பசிப்பிணியை போக்க இராமலிங்கனார் அமைத்தது
1. சமரச சுத்த சன்மார்க்கம் 2. சத்திய தருமசாலை
3. உணவு விடுதி 4. சத்திய ஞான சபை

89. 2012 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருதைப் பெற்ற ”தோல்” என்ற நாவலை எழுதியவர்
1. க.வெங்கடேசன் 2. டி.செல்வராஜ்
3. தமிழன்பன் 4. வைரமுத்து

90. தமிழ்நாட்டில் உள்ள யுனெஸ்கோ பாரம்பரிய சின்னம் அல்லாதது எது?
1. தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில் 2. கங்கை கொண்ட சோழபுரம் கோவில்
3. நீலகிரி இரயில் 4. மதுரை மீனாட்சியம்மன் கோவில்

91. பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க
1. சாய்வு நாற்காலி - ச. கந்தசாமி 2. மின்சாரப்பூ - தமிழன்பன்
3. வானம் வசப்படும் - பிரபஞ்சன் 4. ஒரு கிராமத்து நதி - சிவசங்கரன்

92. ”விளரிப்பண்” - என்பது எதனைப் பற்றியது?
1. விளையாட்டு கருதி பாடப்படுவது
2. ஏக்கத்தையும் இரங்கலையும் தோற்றுவிக்கும் தன்மையுடையது.
3. பிரிந்தார்க்கு துன்பத்தை தருவது
4. விடியற்காலையில் இசைக்கப்படுவது

93. ”து” என்ற ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள் என்ன?
1. பிரிவு 2. துன்பம்
3. எட்டு 4. மதில்

94. ”தீ ” என்ற ஓரெழுத்து தரும் பொருள் என்ன?
1. தீங்கு 2. இகழ்ச்சி
3. இனிமை 4. குற்றம்

95. ஓதியவர் என்னும் சொல்லின் வேர்ச்சொல் என்ன?
1. ஓதி 2. ஓதிய
3. ஓது 4. ஓதும்

96. செத்தவன் என்னும் சொல்லின் வேர்ச்சொல் என்ன?
1. சாதல் 2. செத்து

3. சா 4. சாவு

97. இலக்கண குறிப்பு தருக " வட்டப்பலகை"

1. வினைத்தொகை 2. பண்புத்தொகை
3. முரண்தொடர் 4. நிலைத்தொடர்

98. இலக்கண குறிப்பு தருக " உடுக்கை"

1. வினையாலணையும் பெயர் 2. இடவாகு பெயர்
3. தொழிலாகு பெயர் 4. உரிச்சொற் தொடர்

99. பிரித்து எழுதுக" மக்களொப்பன்றால்"

1. மக்கள் ஒப்பு அன்றால் 2. மக்கள் ஒப்பொன்றால்
3. மக்கள் ஒப்பு அன்று ஆல் 4. மக்கள் ஒப்பன்று ஆல்

100. "மலர்தல்" எதிர்ச்சொல் தருக

1. ஒளிர்தல் 2. வாடுதல்
3. கூம்புதல் 4. அரும்புதல்